நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 255/2023
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக, காவல் ஆய்வாளர், இருக்கன்குடி காவல் நிலையம். (குற்ற எண்.59/2023) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.மாரிச்சாமி,(வயது 26/26) த/பெ.முத்துராமலிங்கம், 2/264, பசும்பொன் நகர், நத்தத்துப்பட்டி, சாத்தூர் தாலுகா. |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 21.05.2023 |
| 8. | புகார் தேதி (Complaint) | 22.05.2023 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 26.05.2023 (Surrender) |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 26.05.2023 |
| 11. | Commitment | – |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 07.10.2023 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 30.07.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 30.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பழனிக்குமார், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:12 +0530

## தீர்ப்புரை

**1.** **குற்றச்சாட்டு :–**

**1.1.** 21.05.2023ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நத்தத்துப்பட்டியை சேர்ந்த கணேசன் மகன் ராஜா அவருக்கு சொந்தமான TN 67 BP 1557 என்ற பல்சர் பைக்கிலும் நத்தத்துப்பட்டியை சேர்ந்த முத்துராமலிங்கம் மகன் மாரிச்சாமி அவருக்கு சொந்தமான TN 67 BK 5139 என்ற Hero Splender இருசக்கர வாகனத்தில் சாத்தூர் சென்றுவிட்டு மாலை 04.45 மணியளவில் சாத்தூரில் இருந்து நத்தத்துப்பட்டிக்கு மேற்கில் இருந்து கிழக்காக இருக்கன்குடி ஆத்துப்பாலம் அருகில் ராஜா முன்னால் சென்று கொண்டிருந்த போது ராஜாவின் இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த மாரிச்சாமி அவரது இருசக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், ஓட்டி வந்து ராஜா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதினார். அதனால் ராஜா நிலைதடுமாறி கீழே விழுந்ததில் ராஜாவின் இடது கண்ணம் மற்றும் மூக்கில் சிராய்ப்பு காயமும், தலையில் இரத்த காயமும், மற்றும் காதில் இருந்து இரத்தம் வந்து இறப்பிற்கு காரணமாக இருந்த குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** **குவி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல் :–**

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** **கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை :–**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் இ.த.ச. பிரிவுகள் 279, 304A கீழான குற்றங்கள் இரண்டு ஆண்டுகள் வரை மட்டுமே தண்டனை விதிக்கத்தக்கதாகும். எனவே, எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அந்த குற்றங்களின் சாராம்சத்தை அவர் விளக்கி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** **அரசு தரப்பு சாட்சிகள் :–**

பட்டியல் சாட்சிகளில் இருந்து 2 நபரும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.லட்சுமணக்குமார் என்பவரும் அ.சா.1 முதல் அ.சா.3 வரை அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:16 +0530

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–

**5.1.** 21.05.2023 ஆம் தேதி மதியம் சுமார் 4.45 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரரின் தம்பியான, இவ்வழக்கு விபத்தில் இறந்த ராஜா, அவருக்கு சொந்தமான TN 67 BP 1557 என்ற பதிவெண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் சாத்தூர் – நத்தத்துப்பட்டி சாலையில் உள்ள ஆற்றுப்பாலம் அருகே வந்துகொண்டிருந்தார். அப்போது எதிரி மாரிச்சாமி, அவருக்கு சொந்தமான TN 67 BK 5139 என்ற Hero Splender இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ராஜா ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதினார்.

**5.2.** இந்த விபத்தில் நிலைதடுமாறி கீழே விழுந்த ராஜாவுக்கு தலை, வலது கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது; அவருடைய காதில் இருந்து இரத்தம் வந்தது. அவரை 108 அவசர ஊர்தி மூலம் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். இவ்வழக்குச் சம்பவம் தொடர்பாக 22.05.2023ம் தேதி 10.00 மணியளவில் ராஜாவின் அண்ணன் அ.சா.1 பெருமாள், மருத்துவமனைக்கு விசாரிக்க வந்த உதவி ஆய்வாளர் திரு.ராஜ்குமாரிடம் புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார். அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.59/2023 பிரிவுகள் 279, 337 இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.2) பதிவு செய்யப்பட்டது. அவர் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்தார். மேலும் சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களையும் பதிவு செய்தார்.

**5.3.** மேல் சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ராஜா சிகிச்சை பலனளிக்காமல் இறந்தார். மேற்படி இறப்பு தகவல் கிடைத்ததால், இவ்வழக்கின் சட்டப் பிரிவுகளைப் பிரிவுகள் 279, 304A I.P.C.–ன் கீழான குற்றங்களாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.5) தயார் செய்தார்.

**5.4.** வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திருமதி.மயில், சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரித்து, சார்பு ஆய்வாளரிடம் கூறியது போலவே சாட்சிகள் கூறியதால் அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யவில்லை. இறந்துபோன ராஜாவின் உடல் மீது பிரேத விசாரணை செய்து அறிக்கை (அ.சா.ஆ.6) தயார் செய்தார். TN 67 BP 1557 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar 125



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:23 +0530

இருசக்கர வாகனத்தையும் மற்றும் விபத்துக்கு காரணமான TN 67 BK 5139 என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பிவைத்து, அவருடைய ஆய்வறிக்கைகளை (அ.சா.ஆ.7 மற்றும் 8) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவுசெய்தார்.

**5.5.** இவ்வழக்கு விபத்தில் இறந்த ராஜா என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை உதவி அறுவை சிகிச்சை நிபுணர் திரு.சுகில் மாடசாமி என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டை (அ.சா.ஆ.9) பெற்று, அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தார். இறந்த ராஜாவுக்கு மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.மதன்குமார் என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டைப் (அ.சா.ஆ.10) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். மேலும் இறந்த ராஜாவுக்கு மேல் சிகிச்சை அளித்த மதுரை வேலம்மாள் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.நவீன்குமார் என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டைப் (அ.சா.ஆ.11) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்தார்.

**5.6.** இறந்த ராஜாவின் பிரேதத்தினை பிரேதபரிசோதனை மேற்கொண்ட மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திரு.மணிகண்டன் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.12) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். முதல் நிலை காவலர் மாரிச்செல்வம் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல்விசாரணை செய்த உதவி ஆய்வாளர் ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்து, அவர்களது வாக்குமூலத்தையும் பதிவு செய்தார்.

**5.7.** காவல் ஆய்வாளரின் விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–**

எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச இன் கீழான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:27 +0530

**8.** <u>**சாட்சியங்கள் மதிப்பீடு**</u> **:–**

**8.1.** இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் மொத்தம் 14 நபர்கள் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள போதிலும், அதில் அ.சா.1– பெருமாள் மற்றும் அ.சா.2 – பாலு மட்டுமே அரசு தரப்பு சாட்சியங்களாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சாட்சிகள் வழக்குச் சம்பவம் குறித்துக் கேள்விப்பட்ட சாட்சிகளாகவும், அலுவல் சாட்சிகளாகவும் இருக்கிறார்கள். அலுவல் ஆவணங்களான பிரேத விசாரணை அறிக்கை (அ.சாஆ.6), விபத்து பதிவேடு (அ.சா.ஆ.9,10 மற்றும் 11), மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.7 மற்றும் 8), பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.12) ஆகியவற்றைச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்ய அரசு தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 294–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு, எதிரி தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று கூறப்பட்டதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. எனவே, அலுவல் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை; ஆனால், அவர்கள் வழங்கிய ஆவணங்கள் எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன

**8.2.** அ.சா.1 – பெருமாள் அவரது சாட்சியத்தில், 21.05.2023 ஆம் தேதி மதியம் சுமார் 04.15 மணி அளவில் தன்னுடைய வீட்டில் இருந்தபோது பாலு என்பவர் போன் செய்து சாத்தூர் – நத்தத்துப்பட்டி சாலையில் உள்ள பாலம் அருகே இந்த வழக்கு விபத்தில் இறந்து போன ராஜா, அவருடைய இருசக்கர வாகனத்தில் முன்பாகவும், ராஜாவுக்கு பின்னால் வந்த எதிரி மாரிசாமி அவருடைய வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து, ராஜாவின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் தன்னுடைய தம்பி ராஜா கீழே விழுந்து காயமடைந்ததாக கூறினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.3.** மேலும், அ.சா.1 – பெருமாள் சம்பவ இடத்திற்கு சென்றபோது தன்னுடைய தம்பி ராஜாவை 108 அவசர ஊர்தி வாகனத்தில் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள் என்றும்; தன்னுடைய தம்பியை சாத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தபோது தன்னுடைய தம்பியின் தலையின் பின் பக்கத்தில் காயம் இருந்தது என்றும்; காது வழியாக ரத்தம் வந்தது என்றும்; மூக்கு மற்றும் இரண்டு கைகளில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது என்றும்; தன்னுடைய தம்பியை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும்; அங்கிருந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு தன்னுடைய தம்பியை அழைத்து அழைத்துச் செல்லுமாறு கூறினார்கள் என்றும்; ஆனால் வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:31 +0530

சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அரசு தரப்பில் வழக்கில் உள்ளது போல், அ.சா.1 பெருமாள் வழக்கு சம்பவத்தை கேள்விபட்ட சாட்சியாக இருக்கிறார்.

**8.4.** அ.சா.2 பாலு அவருடைய சாட்சியத்தில், 21.05.2023 ஆம் தேதி மதியம் 2 மணிக்கு இந்த வழக்கு விபத்தில் இறந்து போன ராஜா அவருக்கு சொந்தமான பல்சர் இருசக்கர வாகனத்தில் சாத்தூரில் இருந்து இருக்கன்குடி நத்தத்துப்பட்டி சாலையில் ஆற்று பாலம் அருகே வந்து கொண்டிருந்தபோது, இந்த வழக்கு எதிரி மாரிச்சாமி ஸ்ப்ளெண்டர் வாகனத்தில் அதிவேகமாக வந்து முன்னால் சென்று கொண்டிருந்த ராஜாவின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்ட ஏற்படுத்தியதாக அவருடைய ஊரைச் சார்ந்த பாலு மற்றும் சதீஷ் ஆகியோர் தகவல் கூறினார்கள் என்றும், அவர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட ராஜாவை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.2 – பாலுவும் அரசு தரப்பில் கூறப்பட்டது போல் வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாகவே இருக்கிறார்.

**8.5.** இந்த வழக்கில் வழக்கு சம்பவம் தொடர்பாக புலன் விசாரணை அதிகாரியால் விசாரணை செய்யப்பட்ட மற்ற சாட்சிகளும் வழக்கு சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சிகளாகவே இருப்பதால், அவர்கள் அரசு தரப்பில் விலக்கிக் கொள்ளப்பட்டார்கள். கூடுதல் சாட்சியாக சிறப்பு உதவி ஆய்வாளர் லட்சுமண குமார், அரசு தரப்பு மூன்றாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை தொடர்பான விவரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.6.** இந்த வழக்கில் இறந்து போன ராஜா சென்ற இருசக்கர வாகனத்தின் மீது எதிரி மாரிசாமி சென்ற இருசக்கர வாகனம் மோதியது என்று அரசு தரப்பு வழக்கு இருக்கக்கூடிய நிலையில், மேற்படி இரண்டு வாகனங்களுக்குமான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளைப் பார்வையிட்ட போது, இரண்டு வாகனங்களிலும் அந்த வாகனங்களை ஓட்டிப் பார்க்க முடியாத அளவிற்கு கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. இவ்வாறு இரண்டு வாகனங்களிலும் சேதம் ஏற்பட்டுள்ளதில் இருந்து, இந்த வழக்கு எதிரி உண்மையிலேயே அரசு தரப்பில் கூறுவது போல் வாகனத்தை ஓட்டிச் சென்று வழக்கு விபத்தை ஏற்படுத்தியிருந்தால் அவருக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால், அந்த காயங்கள் தொடர்பாக அரசு தரப்பில் எவ்விதமான விளக்கமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**8.7.** இந்த வழக்கு விபத்தில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களுக்கும் இருந்த சேதங்களைப் பார்க்கும்போது, இரண்டு வாகனங்களின் பின்பக்க பதிவு எண் பலகையும்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:36 +0530

சைலன்சரும் சேதமாகியுள்ளது. மேலும், எதிரி ஓட்டிச் சென்றதாகக் கூறும் ஹீரோ ஸ்ப்ளெண்டர் இருசக்கர வாகனத்தின் முன்பக்க கைப்பிடி வளைந்திருந்தது என்று மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இறந்து போன நபர் ஓட்டிச் சென்ற பல்சர் இருசக்கர வாகனத்தின் பம்பர் வளைந்திருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், இரண்டு வாகனங்களும் ஒன்றுக்குப் பின் ஒன்று சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதா என்பதிலும் சந்தேகம் ஏற்படுகிறது. உண்மையிலேயே இவ்வாறான சேதங்கள் ஏற்பட்டுள்ளதில் இருந்து, மேற்படி இரண்டு வாகனங்களையும் ஓட்டிச் சென்ற நபர்கள் அதிவேகமாகவும் அசட்டுத் துணிச்சலுடனும் ஓட்டிச் சென்றுள்ளார்கள் என்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**8.8.** எது எவ்வாறு இருந்தாலும், இந்த வழக்கில் எதிரி வழக்கு சம்பவத்தின் போது இருசக்கர வாகனத்தைக் கவனக்குறைவாகவும் அசட்டுத் துணிச்சலுடனும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்று வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லாத சூழ்நிலையில், எதிரி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304A ன் கீழான குற்றத்தைச் செய்துள்ளார் என்று கூறத்தக்க வகையில் சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, இந்த வழக்கில் புலன் விசாரணை கோப்புகளைப் பார்த்து சாட்சியம் அளித்துள்ள சிறப்பு உதவி ஆய்வாளரின் சாட்சியமானது எவ்வகையிலும் அரசு தரப்பு வழக்கை மேம்படுத்துவதாக இல்லை.

**8.9.** இதன் மேலே செய்யப்பட்ட பரிசீலனைகளின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறியுள்ளதால், இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களில் இருந்து விடுதலை செய்யப்பட அவருக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9.** **<u>முடிவு:–</u>**

**9.1.** எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச கீழான குற்றங்களுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச. பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார் .

**9.2.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 10.08.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.10 18:19:39 +0530

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.10 18:19:43 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.பெருமாள் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.பாலு |
| அ.சா.3 | திரு.லட்சுமணக்குமார்(சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.05.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 22.05.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 22.05.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 22.05.2023 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.5 | 23.05.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 23.05.2023 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 30.05.2023 | TN 67 BP 1557 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar 125 இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8 | 30.05.2023 | TN 67 BK 5139 என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்திற்கான மோட்டார்வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | 21.05.2023 | சாத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10 | 21.05.2023 | விருதுநகர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 21.05.2023 | மதுரை வேலம்மாள் மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.அ.12 | 23.05.2023 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :-இல்லை.
**4. எதிரி தரப்பு சாட்சிகள்** :- இல்லை
**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்** :- இல்லை
**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்** :- இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.10 18:19:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு** :-
1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.